புலிகளின் விமானதகர்ப்பு வடபகுதிமுகாம்களைமுடமாக்கிவிட்டது

விலை ரூபா 5. 00

ஈழநாடு
EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 19 இதழ் 87
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 02 - 5 - 1995

(கொழும்பு)
விடுதலைப் புலிகள் சிறிலங்கா விமானப் படையின் விமானங்கள் மீது தாக்குதல்கள் நடத்தியதை அடுத்து, வடபகுதியில் உள்ள முன்னணி இராணுவ முகாம்களுக்கு அத்தியாவசியமான பொருட்களை விநியோகிப்பதில் பெரும் சிக்கல்கள் ஏற்பட்டிருப்பதாக வடபகுதிப் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் உள்ள பூநகரி ஆனையிறவு, வெற்றிலைகேணி, இயக்கச்சி, முலைத்தீவு,

(5-ம் பக்கம் பார்க்க)

பலியான படையினர் தகனம் காங்கேசனில் நடைபெற்றது

(கொழும்பு)
கடந்த 29ம் திகதி சனிக்கிழமை விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகிவீழ்த்தப்பட்ட அவ்ரோ விமானத்தில் சிதைந்த படையினரின் சடலங்களுக்கான இறுதிக்கிரி

(6-ம் பக்கம் பார்க்க)

யுத்த விமானம் போக்குவரத்து ரத்து

(கொழும்பு)
விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலை முறியடிக்கும் வகையில் நவீன சாதனங்கள் சில ஸ்ரீலங்கா போர் விமானங்களில் பொருத்தும் வரையில் இராணுவத்தினரி யுத்த

(5ம் பககம் பார்க்க)

இன்றைய அரசியல் நிலையில்

இரத்தம் சிந்திப் போராடியே நாம் விடுதலையை பெறவேண்டும்!

- மேதினக் கூட்டத்தில் தமிழ்ச்செல்வன் உரை -

(யாழ்ப்பாணம்

நீதிக்காகவும், தர்மத்திற்காகவும் எமது சுதந்திரத்திற்காகவும் தமிழீழ போராட்டம் நடைபெறுகிறது. இந்நிலையில்நாம் இரத்தம் சிந்தி போராடி எமது விடுதலையை வென்றெடுக்கவேண்டும் என தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

மேதினத்தையொட்டி நேற்று நடைபெற்ற பேரணியைத் தொடர்ந்து இடம்பெற்ற கூட்டத்தில் பேசுகையில் திரு. தமிழ்ச்செல்வன் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் பேசுகையில், நாம் இன்று ஒரு வித்தியாசமான சூழ்நிலையிலே வித்தியாசமான காலப்பகுதியிலே காலடி எடுத்துவைத்திருக்கி

(5-ம் பக்கம் பார்க்க)

கொழும்பில் மேதினப் பேரணிகள் நடைபெறவில்லை

(கொழும்பு)
நேற்று கொழும்பில் மேதினப் பேரணிகள் எதுவும் நடைபெறவில்லை விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தக் கூடும் என்ற அச்சத்தினால் பேரணிகள் ரத்துச் செய்யப்

(6-ம் பக்கம் பார்க்க)

மேதினப் பேரணியில் மக்கள்வெள்ளம்

(உடுவில்)
மேதினப் பேரணி நேற்று மருதனுமடம் சந்தியில் இருந்து ஆரம்பமானபோது பல்லாயிரக்கணக்கான மக்கள் அதில் கலந்து கொண்டனர்.

நேற்று பிற்பகல் 2.15 மணியளவில் மருதனுர் மடத்தில் ஆரம்பித்த இப்பேரணி யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தை மாலை ஐந்து மணிவரை தொடர்ந்தது.

ஒட்டோக்களின் ஊர்வலம் பேரணியின் ஆரம்பத்தில் இடம் பெற்றது.

(5-ம் பக்கம் பார்க்க)

மேதினகூட்டத்தில்சந்திரிகா கலந்துகொள்ளவில்லை

(கொழும்பு)
பொதுசன ஐக்கிய முன்னணி அரசின் முதலாவது மேதினக்கூட்டம் நேற்று கொழும்பு மாநகர சபை மைதானத

(6-ம் பக்க பார்க்க)

புலிகளுக்கு தகுத்த பதிலடி கொடுப்போம்!

சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)
"விடுதலைப்புலிகள் இரண்டு விமானங்களைச் சுட்டுவீழ்த்தி சுமார் நூறு படையினரை டுகொலை செய்த சம்பவத்தை, அரசாங்கம் பார்த்துக் கொண்டு சும்மா இருக்காது. இதற்கு பதிலடி கொடுப்பது பற்றி அரசு சிந்தித்துக் கொண்டே இருக்கிறது"

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காகுமாரதுங்கா 'இந்தியா ருடே' சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

(5-ம் பக்கம் பார்க்க)

நேற்று யாழ். நகரில் நடைபெற்ற மேதினப் பேரணியில் தமிழீழ காவல்துறையினரின் அணிவகுப்பும் சுலோக அட்டைகளுடன் மக்கள் செல்வதையும் படத்தில் காணலாம். [படங்கள் : தேவா]

பனிப்புலம்வந்த படையினர் வீடுகளை உடைத்துக் கொள்ளையடித்தனர்!

(மானிப்பாய்)

பண்டத்தரிப்பு செட்டிக் குறிச்சிப் பகுதிக்கு கடந்த 28-ந் திகதி வெள்ளிக்கிழமை வந்தி படையினர் அப் பகுதியிலுள்ள பல வீடுகளை உடைத்து பெறுமதிமிக்க பல பொருட்களை கொள்ளையடித்துச் சென்றனர்.

கடந்த 28-ந் திகதி அதிகாலை 6 மணியளவில் பண்டத்தரிப்பு பகுதியிலிருந்து பனிப் புலம் ஊடாக வீட்டு வளவி லுள்ள வேலிகளை வெட்டிக் கொண்டு வந்த படையினர் செட்டிகுறிச்சியி லுள்ள சோ. மகேந்திரன் என்பவரது பூட்டியிருந்த வீட்டுக் கதவை உடைத்தும் யன்னல் கண்ணாடிகளை நொருக்கியும் உள்ளே புகுந்து அங்கிருந்த இரண்டு வானொப் பெட்டிகள், இரு சுவர்மணிக் கூடுகள், 3 கைக்கடிகாரம், 2000 ரூபா ரொக்கப்பணம், உடுபுடவைகள், இரண்டு வாழைக்குலையையும் வெட்டிச் சென்ற இவர்கள் அவர்களுடைய சூடும்'கி காட்டுகளையும் வீதியில் வீசிவிட்டு சென்றுள்ளனர்.

மேலும் இதே படையினர் அங்குள்ள மகாதேவி என்பவரது வீட்டிற்குள் புகுந்து ஒரு தங்கச் சங்கிலி, ஒரு சோடி காப்பு றேடியோ மற்றும் பாடசாலை உபகரணங்களையும் எடுத்துச் சென்றுள்ளனர். அவ்விடத்திலுள்ள வீதியொன்றில் நின்ற சிவயோகலிங்கம் ஞானேஸ்வரன் என்ற 21 வயதுடைய இளைஞரை சுட்டுக் கொன்றுள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. -71-சி

இன்று

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினரால் யாழ்ப்பாணம் லோட்டஸ் வீதி, கோட்டையம்பதி ஸ்ரீசிவ சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் கடந்த மூன்று மாதங்களாக நடைபெற்று வந்த பெரியபராண படன விரிவுரை பூர்த்திவிழா இன்று செவ்வாய் மன்றத்தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும்.

புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995–05–02

செவ்வாய் இரவு

8-02 - ஊர்சுற்றும் ஒலிவாங்கி
8-10 - நேற்றைய தினம் நடைபெற்ற தொழிலாளர் தின நிகழ்ச்சிகளின் தொகுப்பு
8-30 - செய்திகள்
8-40 - கருத்துக்களம் - இ. இராஜேஸ்வரன் எழுதிய 'வெற்றிப்பாதையில்.
8-50 - மலரும் மொட்டுக்கள்

1995–05–03

புதன் காலை

7-02 - மாவீரவணக்கம்
7-15 - நீங்கள் கேட்டவை
7 30 - செய்திகள்
7-35 - பத்திரிகைச்செய்திகள்
7-40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995–05–02

செவ்வாய் மாலை

5-01 - சிந்தனைச் சிதறல்
5-02 - எழுச்சி கீதம்
5-10 - புதியவை
5-15 - தமிழிசை
5-30 - வானொலி மதியூகம் -18
6-00 - சிந்தனைக்குச் சில வினாடிகள்
6-02 - இவ்வாரம் இவர்
6-15 - விளையாட்டுச் செய்திகள்
6-20 - என் தெரிவு
6-30 - மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

விமானத் தகர்ப்பையடுத்து போரை முன்னெடுப்பதற்கு அரசு 2 ராணுவ தளபதிகளை நியமிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளினால் இரு அவ்ரோ விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதை அடுத்து, வடக்கு-கிழக்கு யுத்தத்தை முன்னெடுப்பதற்காகக் கூடிய அதிகாரங்களைக்கொண்ட இரு இராணுவத் தளபதிகளை அரசாங்கம் நியமித்துள்ளதாகத தெரிவிக்கப்படுகிறது.

மேஜர் ஜெனரல ஏ. எம். யு. செனிவிரத்ன, மேஜர் ஜெனரல் கெமுனு குலதுங்க ஆகியோரே புதிதாக நியமிக்கப்பட்ட தளபதிகளாவர்.

புதிதாக ஆயிரம் இராணுவத்தினரைச் சேவையில் சேர்த்துக்கொள்வதற்கும் இவ்வதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

1994ம் ஆண்டு ஜூன் மாதம் கிழக்குப் பிராந்திய இராணுவத தளபதியாக நியமிக்கப்பட்ட ஏ. எம். யு. செனிவிரத்ன, 1994ம் ஆண்டு இறுதிப் பகுதியில் அநுராதபுரம், புத்தளம், மன்னார், வவுனியாப் பகுதிகளில் தளபதியாகக் கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திரு. கெமுனு குலதுங்க யாழ்ப்பாண இராணுவ தளபதியாகவும் இராணுவ பேச்சாளராகவும் செயற்பட்டவர்.

1994-ம் ஆண்டு இறுதிப் பகுதியில் தற்போதைய அரசாங்கத்தினால் மேஜர் ஜெனரலாக இவர் பதவி உயர்த்தப்பட்டார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

வடக்கு - கிழக்கு இராணுவ நடவடிக்கை பொறுப்பதிகாரியாகவும் பின்பு ஆனையிறவு, முல்லைத்தீவு, பூநகரி இராணுவ நடவடிக்கை குழு பொறுப்பதிகாரியாகவும் இவர் நியமிக்கப்பட்டவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. -க

புலிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி தனது பேட்டியில் மேலும் கூறியதாவது:

விடுதலைப்புலிகளின் கொலைப் பட்டியலில் எனது பெயர் முதலிடம் வகிப்பது எனக்குத் தெரியும். முனனாள் இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தியின்படுகொலைக்கும் விடுதலைப் புலிகளே காரணம். விமானத் தாக்குல் நடாத்திய விடுதலைப்புலிகளை நாம் தட்டிக் கேட்காமல், விடப்போவதில்லை,

இதற்கு பதிலடி கொடுப்பது பற்றி இராணுவம் தற்போது ஆலோசித்து வருகின்றது என்றும் கூறினார் வி-இ

கதிர்காமம் ஆலய சூழலில் சைவ போசனசாலை இல்லை

(கொழும்புத்துறை)

கதிர்காமம் ஸ்ரீ முருகன் ஆலயத்துக்கு தரிசனம் செய்ய செல்லும்அடியார்களுக்குசுத்த சைவபோசன உணவு இப் பகுதியில் உள்ள கடைகளில் பெற முடியாத துர்பாக்கிய நிலையை அடைந்துள்ளனர்.

பல உணவு சாலைகள் இருந்தும் சைவச்போசன சாலை ஆலய சூழலில் இல்லை.

மேற்படி ஆலயத்திற்கு தற்போது உல்லாசப் பயணிகள் பெருமளவில் செல்கின்றனர். இங்கு தற்போது சைவ மடாலயம் ஒன்றே உள்ளது என இங்கிருந்து சென்றுவந்த இந்து சமய அடியார்கள் கவலையுடன் தெரிவித்தனர். -154-ரி

வதிவிட வேளாண்மைப் போட்டி பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகமும் கடற்புலிகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து நடாத்திய வதிவிட வேளாண்மை போட்டி பரிசளிப்புவிழா நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய அரங்கில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக அம்பன் உபபணிமனை பொறுப்பதிகாரி திரு ஆர். சிவபுண்ணியம் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவிலே பிரதம விருந்தினர்களாக அம்பன் விவசாயப் போதனாசிரியர் திரு எஸ். துரைராசாவும் கடற்புலிகள் தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட இணைப்பாளரீ திரு. செ. வைகரனும் கலந்து கொண்டனர்.

முதலாவது பரிசை அம்பனைச் சேர்ந்த செல்வி யசிந்திரா செல்வரத்தினமும் இரண்டாவது பரிசை செம்பியன்பற்றைச் சேர்ந்த திரு. எம். திருச்செல்வமும் மூன்றாவது பரிசை நாகர்கோவிலைச் சேர்ந்ததிரு. வி.ரவிக்குமாரும் பெற்றுக் கொண்டனர். அத்துடன் 12 ஆறுதல் பரிசுகளும் வழங்கப்பட்டன. கிராம சேவையாளர் மட்ட ரீதியாக மூவருக்கும் பரிசுப் புள்ளி அடிப்படையில் 10 பேருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. அந்நிகழ்வின்படியான போட்டியாளர்களை இணைத்துக் கொண்டமைக்காக அம்பன், குடத்தனை, மருதங்கேணி கிராமசேவகர் அலுவலர் பிரிவு வட்டத் தொடர்பாளர்களுக்கும், கிராம சேவை அலுவலர்களுக்கும் சிறப்புப் பரிசில்களும் வழங்கப்பட்டன. -52

பிரசவ தாய்மார்களுக்கான ஊசி மருந்துக்கு தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

யாழ்; குடாநாட்டில் பிரசவத்தின்போது தாயினதும், சேயினதும் குருதிகள் ஒவ்வாதநிலையில் பிரசவம் ஏற்பட்ட 72 மணி நேரத்தினுள் தாய்க்கு போடவேண்டிய ''ரோகம்'' என்ற ஊசி மருந்துக்கு தற்போது பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பிரிவு வைத்திய சாலைகளில் மட்டுமன்றி தனியார் மருந்தகங்களிலும் இந்த ஊசிமருந்துக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது.

தாயினது இரத்தத்திற்கு ஒவ்வாத நிலையில் பிறந்த குழந்தையின் இரத்தம் காணப்பட்டால இந்த ''ரோகம்'' ஊசி மருந்து தாய்க்கு ஏற்றப்படாவிடில் தாயின் அடுத்த கருத்தரிப்பின்போது கருச்சிதைவு உட்பட பல்வேறு பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புண்டு.

முன்பு இந்த ஊசி மருந்து வெளிச்சந்தையில் 700 ரூபா விற்கு விற்பனை செய்யப்பட்ட தாகவும் தெரியவருகிறது.

154-ரி

விரைவில் வெளிவருகின்றது!

ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

கீழ்க்காணும் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன:

★ ஈழநாடு வாரமலருக்கு தரமான சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள்.
★ சிறுவர் அரங்கு மாதர் அரங்குக்கான படைப்புக்கள்.
★ பாடசாலை மாணவர்களின் ஆக்கங்கள்
★ போராட்ட காலத்தில் ஏற்பட்ட உண்மைச் சம்பவங்கள்.
★ பல்வேறு வகையான தரமான துணுக்குகள்;

அனுப்பவேண்டிய முகவரி:
ஈழநாடு (வாரமலர்)
த. பெட்டி எண் 49, யாழ்ப்பாணம்.

(ஏ 4904)

வட்டு. லயன்ஸ் கழகம்

பாடசாலைகளுக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

(உடுவில்)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினரின் 17வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வட்டுகோட்டை இந்துக கல்லூரி சைக்கிள் தரிபபிட புனரமைப்புக்கென ஐயாயிரம் ரூபாவுக்கான காசோலை வழங்கப்பட்டது.

கழகத் தலைவர் டாக்டர் கே. இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில், அராலி இந்துக் கல்லூரியின் பாவனைக்கென நீர் இறைக்கும் இயந்திரக் கொள்வனவுக்கென மூவாயிரத்து அறுநூற்றைம்பது ரூபாவும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

மேலும், பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் கற்கும் வசதி குறைந்த நிலையிலுள்ள மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள், பாடசாலை உபகரணங்கள் என்பனவும் அன்பவிப்பு செய்யப்பட்டன.

இவ்விழாவில் லயன்ஸ் கழக வடபிராந்திய தலைவர் லயன் எஸ். இராஜேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். அத்துடன் லயன்ஸ் கழகத்தின் முன்னாள் பிரதி மாவட்ட ஆளுனருமான டாக்டர் ரி. பகீரதன், முன்னாள் பிராந்தியத் தலைவர் டாக்டர் எமில் அத்தனஞ்சியார் ஆகியோர் இவ்விழாவில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். -109

மணிவாக்கு

சிறந்த மனிதர்களிடம் பண்பு நிறைய இருக்கும். அகம்பாவம் துளியும் இருக்காது.

— கன்பூஷியாஸ்.

நமது நோக்கு

அவர்கள் போக்கு!

''எவ்வாறான சவால்கள் வந்தாலும் சமாதானப் பேச்சுவார்த்தையில் எடுத்துவைத்த காலைப் பின்னோக்கி நகர்த்தாமல் நம்பிக்கையுடன் முயற்சியைத் தொடரவேண்டும்!'' என வாசுதேவ நாணயக்காரா வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

உள்நாட்டுப் போரினால் நாடு எவ்வளவோ சீரழிந்து போய்விட்டது எனவே மீண்டும் போரைத் தொடராது மக்கள் இன்னல் அடையக் கூடாது என்றெண்ணுவதன் வெளிப்பாடு அவரின் வேண்டுகோளில் தெரிகிறது.

வடபகுதிக்கு வந்து மக்கள் நிலையை நேரில் கண்டறிந்தவர் கருத்து அது.

அதேபோல - ''பொருளாதாரத் தடையை அரசு அவசரப்பட்டு அறிவித்துவிட்டது!'' எனத் தமிழ்க் கட்சித் தலைவர் ஒருவர் அரசைச் சாடியுள்ளார்.

வெளிநாட்டு அரசுகளோ சமாதான முயற்சிகள் தொடரவேண்டும் என்ற ரீதியில் அறிக்கைகள் வெளியிட்டு வருகின்றன.

நாட்டிலே நெருக்கடி நிலை அதிகரித்தபோது, சமாதான முயற்சிகள் பற்றிய சிந்தனைகள் வெளிவருவது வரவேற்கக் கூடியதே.

ஆனால்- ஐ.தே.க.வின் போக்கு எப்படி அமைகிறது?

படையினரின் நடவடிக்கைகளுக்கு மக்கள் உதவவேண்டும் என ஐ. தே. க. தலைவர் ரணில் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

ஆயுதப் படையினரும் பொலிஸாரும் தமது கடமைகளைச் செய்யப்போது மக்கள் உதவி செய்ய வேண்டுமெனவும் கேட்டிருக்கிறார்.

ஐ. தே. க. ஆட்சிக் காலத்தில் ஆயுதப் படையினர் எவ்வாறெல்லாம் நடந்துகொண்டனர் என்பதை நாடறியும்.

அந்தக் கொடூரங்களைத் தொடரவா ஐ. தே. க, விரும்புகிறது?

அதுமாத்திரமல்ல- வடகிழக்கின் பௌத்த விகாரைகள் பற்றிய கவலை அதற்கு ஏற்பட்டுவிட்டது.

விமானங்களாலும் எறிகணைகளாலும் இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ ஆலயங்கள் பல ஐ.தே.க ஆட்சிக் காலத்தில் அழிவுற்றன என்பதை மக்கள் மறந்துவிடுவார்களா?

''ஆபத்துக் காலங்களில் உண்மையான நண்பனை அறிந்துகொள்!'' என்பது ஆன்றோர் அறிவுரை. வெளிவரும் அறிக்கைகளின் உள்நோக்கம் உணரப்பட வேண்டும்!

இராணுவ தலைமையகத்தில் விடிய விடிய தீவிர ஆலோசனை

(கொழும்பு)

கொழும்பில் சில தினங்களாக இராணுவ தலைமையகத்தில் விடிய விடிய முக்கிய பாதுகாப்பு கூட்டங்கள் நடைபெற்று வருவதாக பி. பி. சி. தெரிவித்தது.

கடந்த சில தினங்களாக இராணுவ தலைமையக மின் விளக்குகள் விடிய விடிய எரிந்துகொண்டிருந்ததுடன் படை உயர் அதிகாரிகள் பலர் இராணுவ தலைமையகத்துக்கு வருவதும் போவதுமாக இருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் இரு அவ்ரோ விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதால் முப்படையினரும் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளதுடன் அடுத்த நடவடிக்கை குறித்து தீவிரமாக ஆராய்ந்து வருகிறார்களாம். கடந்த சில தினங்களாக படை அதிகாரிகள் பெரும் பதற்றத்துடனும் பரபரப்புடனும் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பாதுகாப்பு கவுன்சில் மாநாடு அமைச்சர் ரத்வத்தை தலைமையில் ஐந்து முறையும் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் இரு முறையும் கூடி பாதுகாப்பு நிலைமை குறித்து ஆராய்ந்துள்ளது. விடுதலைப்புலிகளின் தாக்குதலில் உயிரிழந்த படையினர், அதிகாரிகள் தரத்தில் உள்ளதால் அவர்களது இழப்பு படையினருக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் இவ்வாறான சம்பவங்கள் ஏற்படுவதை தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முப்படைத் தளபதிகளும் வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

25 000 ரூபா கடனுதவி

(பண்டத்தரிப்பு)

யாழ். சமுக அபிவிருத்தி மன்றம் சுயமுயற்சி கடனுதவி திட்டத்தின் கீழ் கட்டுடை சமுக அபிவிருத்தி சேமிப்பு கழகத்தைச் சேர்ந்த 5 உறுப்பினர்களுக்கு பசுமாடு வளர்ப்புக்காகதலா 5000 ரூபா வீதம் 25ஆயிரம் ரூபாவை அண்மையில் வழங்கியுள்ளது.

மாதம் 216 ரூபா வீதம் இரண்டு வருட காலத்தில் இப்பணத்தை மன்றத்திற்கு திரும்பச் செலுத்தவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. -72

நவீனரக ராணுவ தளபாடமே படையினர் முதல் தேவையாம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களை முறியடிக்க முப்படையினருக்கும் உடனடியாக நவீனரக இராணுவ தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டுமென முப்படைத் தளபதிகளும் பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் வற்புறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நவீனரக இராணுவ தளபாடங்களின் தேவை என இக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டதால் அவற்றை உடனடியாக கொள்வனவு செய்வதற்கு அரசு முன்னுரிமை அடிப்படையில் அனுமதி வழங்கலாமெனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகள் வசம் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் வந்துள்ளதால் இதுவரை இல்லாத பல நவீனரக இராணுவ தளபாடங்கள் அவர்களுக்கு கிடைத்திருக்கலாமென படையினர் சுட்டிக்காட்டியுள்ளனர். புலிகள் வசம் வந்துள்ள எவ்வகையிலான நவீனரக ஆயுதங்கள் உள்ளன என்பது குறித்தும் படைவட்டாரங்களில் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் விடுதலைப்புலிகளிடம் விமான எதிர்ப்பு ஏவுகணை எப்படி வந்து சேர்ந்தது என்பது குறித்து முப்படை உயர் அதிகாரிகளும் அரசுத் தலைவர் அதிகாரிகளும் பெரும் ஆச்சரியமடைந்துள்ளனராம். மோதல் கவிர்ப்பு காலத்திற்கு முன்பே அவர்களிடம் இந்த ஆயுதங்கள் வந்து சேர்ந்திருக்கலாமெனவும் நம்பப்படுவதாகவும் பாதுகாப்பு செய்திகள் தெரிவித்தன. -சி

கொழும்பு நகர் எங்கும் ராணுவமயப்படுத்தப்படுகிறது!

(கொழும்பு)

கொழும்பு நகரம் பெருமளவில் இராணுவ மயப்படுத்தப்பட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு-கிழக்கில் பாரிய தாக்குதல்களை நடாத்திவரும் புலிகள் கொழும்பில் தற்கொலைப்படைத் தாக்குதல்களை நடாத்தலாமென்ற அச்சம் படையினர் மத்தியில் அதிகரித்து வருவதால் கொழும்பில் ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் கடந்த சில தினங்களாக எங்கு பார்த்தாலும் இராணுவத்தினரையும் பொலிஸாரையுமே காணமுடிகிறது என பி. பி. ஸி தெரிவித்தது. கொழும்பு நகரினுள் செல்லும் சகல பாதைகளிலும் படையினர் வீதித் தடைகளை போட்டு வாகனங்களை அக்கு வேறு ஆணிவேறாக சோதனையிட்டு வருகின்றனர். சந்தேகத்திற்கிடமானவர்கள் மிகத் தீவிரமாக விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இராணுவத்தினரை விட கடற்படையினரும் முக்கிய கேந்திர நிலையங்களின் நவீனரக ஆயுதங்களுடன் நிறுத்தப்பட்டுள்ளனர். வீதிகள் எங்கும் படையினரின் வாகனங்களே பெருமளவில் நடமாடுகின்றன போர்க்கால சூழ்நிலை ஒன்று போலவே கொழும்பின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார்

இரண்டாயிரத்துக்கும்மேற்பட்ட தமிழர் கொழும்பு நகரில் கைது

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் கடந்த ஒரு வாரத்தில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர், யுவதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் தினமும் சுற்றிவளைப்புகள் இரவு, பகலாக நடைபெற்று ஆயிரக்கணக்கில் தமிழர் வயது வேறுபாடின்றி கைது செய்யப்புட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட பலர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டு தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

விசாரணைகளின் போது தமிழ் இளைஞர், யுவதிகள் மிகமோசமான தாக்குதலுக்கிலக்காகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் எழுந்துள்ள பதற்ற நிலைமை, மற்றும் சுற்றிவளைப்புகள் கைதுகள் காரணமாக தமிழ் மக்கள் அதிகளவில் வசிக்கும் பகுதிகளில் மக்களின் நடமாட்டம் மாலை 6 மணிக்கு பின்னர் வெகுவாக குறைந்து வீதிகள் வெறிச்சோடி விடுகின்றனவாம்.

இதேவேளை வீடுகளில் சோதனைகளுக்கு வரும் படையினர் அங்குள்ள பெறுமதி வாய்ந்த பொருட்களை கொள்ளையடித்துச் செல்வதாக தமிழ் மகளிர் பொலிஸாரிடம் புகார்களை தெரிவித்துவருகின்றனர். -சி

சார்க் மாநாட்டின் போது காஷ்மீர் பிரச்னை குறித்து ராவ் - பெனஸிர் பேச்சு

(புதுடில்லி)

புதுடில்லியில் இன்று ஆரம்பமாகும் 'சார்க்' மாநாட்டில் காஷ்மீர் பிரச்னை குறித்து இந்தியாவும் பாகிஸ்தானும் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளன.

காஷ்மீர் விவகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு இந்திய தரப்பில் விருப்பம் தெரிவிக்கப்பட்டு வந்த போதிலும் பேச்சுவார்த்தைக்கு இது உகந்த தருணமல்ல என பாகிஸ்தான் சாக்குப் போக்குக் கூறி தட்டிக் கழித்து வந்தது. தற்போது பேச்சுவார்த்தைக்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்திய - பாகிஸ்தான் உறவில் விரிசல் ஏற்பட்ட சில அம்சங்கள் குறித்து இரு நாட்டுத் தலைவர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடாத்தப்படும் என பாகிஸ்தான் வெளிவுறவுத்துறை அமைச்சர் ஆசாத் அலி தெரிவித்துள்

(5-ம் பக்கம் பார்க்க)

பலதும் பத்தும்

யார் புத்திசாலி?

பல விஷயங்களைத் தெரிந்துகொள்வது, பல பாட நூல்களைப் படித்து வைத்திருப்பது மாத்திரம் தான் புத்திசாலித்தனமா?

பெற்ற கல்வியைக் கொண்டு தனது வாழ்வை மகிழ்ச்சியாக அமைத்துக் கொள்வதும், தனது சமூகம் வளத்தோடு வாழ அக் கல்வியைப் பிரயோகிப்பதுமே புத்திசாலித்தனம்.

''கசடறக் கற்றபின் அதற்குத்தக நிற்காவிடில் படித்ததாற் பயனேது?'' - என்பது வள்ளுவர் கேள்வி. பாட நூல்களைப் படித்துப் பரீட்சைகளிற் சித்தியடைந்து தராதரப் பத்திரங்களும் பட்டங்களும் பெறுவது தொழில் தேட உதவும். ஆனால்— படித்தபடி நடப்பதுதான் வாழ்க்கையில் வெற்றிபெற உதவும்.

— மயூரன்.

இராசி பலன்

02-05-1995

செவ்வாய்க்கிழமை

(தமிழுகு சித்திரை - 19)

திருதியை பி. இ. 4-53 வரை, ரோகிணி பி இ. 2-53 வரை. இராகுகாலம் பி ப. 2-57 முதல் 4-27வரை சுபவேளை காலை 10-27 முதல் 11-53 வரை அமிர்தசித்த யோகம்.

மேஷம்: பிறர் வன்மம், அமைதிக்குறைவு பணமுடை.

இடபம்: தொழில் சிறப்பு, காரியசித்தி, இன வருகை.

மிதுனம்: நாவடக்கம் குடும்ப கவலை, அலைச்சல்.

கடகம்: பிறர் உதவி, தாய்ப்பாசம், பயணநன்மை.

சிங்கம்: பகை நீங்குதல், பணப்புளக்கம், நண்பர் சகவாசம்.

கன்னி: கருத்து மோதல், உடல் அசதி. மனச்சுமை.

துலாம்: எதிர்பாராத துன்பம், சகோதரபகை, வேதனை.

விருச்சிகம்: தொழில்லாபம், சலசலப்பு, சுபகாரியம்.

தனுசு: குடும்பசுகம், அதிகாரிகள் பாராட்டு, விருந்து.

மகரம்: மனவிரக்தி, தொழில் பகை, யோசனை.

கும்பம்: முடிவற்ற பேச்சு, காரியதடை, உடல் உபாதை.

மீனம்: தொழில் முதலீடு, குறைசொல்லல், அதிகாரம்!

— ஜோஸ்யர்

ஸ்ரீலங்காவுக்கு கிடைத்த கடன் உதவியும் சந்திரிகா அரசாங்கத்தின் அவசர தேவைகளும்

இந்து சமுத்திரத்தின் முத்து என்றும் தீவுகளின் ராணி என்றும், சுவர்க்க புரி என்றும் வர்ணிக்கப்படும் இலங்கை சர்வதேச வர்த்தகர்களைப் பொறுத்தவரையில் ஓர் கவர்ச்சிக் கன்னி. இலங்கையிலுள்ள வளங்களை சுரண்டுவதற்கு அவர்கள் போட்டி போடுவதால் இலங்கைஅரசை தமது சார்பாக வைத்திருப்பதற்காக பல கடன்களையும் நன்கொடைகளையும் வழங்குகின்றனர்.

சந்திரிகா அம்மையாரின் அரசு, புலிகளின் செயலை மிஞ்சியும், பிரசாரங்களுக்கு அப்பாலும் பாரிஸில் கூடிய நிதி வழங்கும் நாடுகளிடம் 85 கோடி டாலரைகடனாகப் பெற்று புலிகளை வெற்றி கண்டதாக தம்பட்டம் அடிக்கின்றது, இது உண்மையல்ல.

உதவி வழங்கும் நாடுகள் ஏன் இவ்வுதம் மூன்றும் உலக நாடுகளுக்கு கடன்களை வழங்குகின்றது என்பதனை ஆராய்வது சாலப்பொருந்தும் உதவி வழங்கும் நாடுகள் பொருண்மிய வளர்ச்சியடைந்தவையாகவும் உலக பொருண்மியத்தைக் கட்டுப்படுத்துபவையாகவும் இருக்கின்றன. மேலும் இவைகள் முதலாளித்துவ ஜனநாயகம் உலகில் சரிந்துவிழாதிருக்கவேண்டுமென்று மிகுந்த அக்கறை கொண்டவையாகவும் விளங்குகின்றன.

சர்வதேச பொருண்மியம்

உலகில் ஜனநாயக முறையில் மக்களால் தெரிவு செய்யப்படும் அரசாங்கங்களென்று கூறப்படும் அரசுகள் ஸ்திரமாக இருக்க வேண்டுமென்பதையும் இடதுசாரிப் புரட்சிகள், விடுதலைப் போராட்டங்கள் போன்றவற்றுல் இந்த நாடுகளில் மாற்றங்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும் வகையில் அந்நாடுகளுக்கு உதவிகள் வழங்கப்படுகின்றது. சர்வதேசபொருண்மியம் உடைந்து போகாமல் இருப்பதற்காக இந்தஉதவிகள் வழங்கப்படுகின்றன. உதவி வழங்கும் நாடுகள் வெவ்வேறு நாடுகளுக்கு எவ்வளவுதொகையை கடனுகக் கொடுக்கவேண்டுமென்ற புள்ளி விபரத்தை ஏற்கனவே தயாரித்து காலத்திற்கு காலம் அமுல்படுத்துகின்றனர்.

சந்திரிகாவின் சுயரூபம்

இலங்கை ஓர் கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த நாடாக இருப்பதனுல் அதன் அரசியலில் மாற்றங்கள் ஏற்பட்டு இடதுசாரிப் போக்குடைய பொருண்மிய அடிப்படையில் ஆட்சி மாறுவதை உதவி வழங்கும் நாடுகள் விரும்பமாட்டா. இதன் காரணமாகத்தான் சில சந்தர்ப்பங்களில் கோரப்படும் கடன் தொகையிலும் பார்க்க கூடியதொகை கடன் வழங்கப்படுவதும் உண்டு. கடந்த ஐ. தே. க. அரசாங்கம் ஆட்சியில் இருக்கும் போது ஜே. வி. பி. ஆயுதம் தாங்கிய போராட்டத்தின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றுமல் இருப்பதற்காக 'பிரேமதாசா' அரசாங்கத்திற்கு மிகக் கூடிய கடன் வழங்கப்பட்டது திருமதி சந்திரிகா ஆட்சிக்கு வரும் முன் தன்னை இடதுசாரிப்போக்குடையவர் எனக் காட்டிக் கொண்டு திறந்த பொருளாதாரக் கொள்கையை எதிர்ப்பவராகவும் காட்டிக்கொண்டார். இதனுல் கடந்த அரசின் கீழ் முதலீடு செய்த அந்நிய முதலீட்டாளர்கள் மத்தியில் ஒருவகைக் பதட்டம் ஏற்பட்டது. ஆனுல் திருமதி சந்திரிகா பிரதமராகவும் பின்னர் ஜனுதிபதியாகவும் ஆட்சி ஏற்றபின் தனது

ச. தியாகராசா

சுயரூபத்தைக் காட்டத் தொடங்கினர் திறந்தபொருளாதாரக் கொள்கைக்கு குந்தகம் விளைவிக்க மாட்டேன் என்றும் அந்நிய முதலீட்டாளரை வரவேற்பதாகவும் கூறினர்.

கபட நாடகம்

இது மட்டுமல்ல, கபட நோக்கத்துடன் ஸ்ரீலங்கா அரசு தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நடாத்திவந்த போரை நிறுத்தி பேச்சுவார்த்தை மூலம் அவர்களுடன் அரசியல் தீர்வை ஏற்படுத்தப் போவதாகக்கூறி பேச்சுவார்த்தை என்ற நாடகத்தையும் நடாத்தியது. பேச்சுவார்த்தை நடந்தகாலத்தில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் புனரமைப்பு வேலைசெய்யப்போவதாகவும் அதற்கு பெருந்தொகைப் பணம் தேவை என்றும் விளம்பரப் படுத்தியது.

மேகூற்றிய நடவடிக்கை மூலம் உதவி வழங்கும் நாடுகளிடம் இருநது பெரும் தொகை பணத்தை கடனுகப் பெற சிறிலங்கா அரசு தட்டமிட்டது. முதலாளித்துவ ஜனநாயக முறையில் தேர்தலில் வென்று அரசமைக்கும் அரசுகளிற்கு சாதாரணமாக இயல்பாகவே கடனுதவி வழங்கும் நாடுகள் திருமதி சந்திரிகாவை பொறுத்தமட்டில் சிறு மௌனத்தைகையாண்டனர். அதற்கு காரணம் சந்திரிகா அம்மையார் தமது காலடிக்கு வரட்டும், பேரம்பேசிக் கடனை பெறட்டும் என்பதற்காகவும் தங்களது முக்கியத்துவத்தை அவருக்கு உணர்த்துவதற்காகவுமே அவ்விதம் நடந்தனர். பின்னர் கோரப்பட்டதொகையிலும் பார்க்க சொற்பம் கூடுதலாக 85 கோடி டாலர் சிறிலங்காவிற்கு கடனுக வழங்கப்பட்டுள்ளது.

அடுத்த படியாக கிடைக்கப் பெற்ற 85 கோடி டாலர் கடனைக் கொண்டு திருமதி சந்திரிகா எதனை சாதிக்கமுடியும் என்பதைப் பார்ப்போம். நாட்டின் பொருண்மிய அபிவிருத்தியை ஓர் தொலைநோக்கில் பரர்க்கும்போது நீண்டகால அந்நிய முதலீடுகள் பயன் உடையவையாக இருக்கும் என்று முதலாளித்துவ பொருளாதார நிபுணர்கள் கூறுவர். ஆனுல் இன்றைய கிறிலங்காவின் அரசியல் தளம்பல்நிலையில் அந்நிய முதலீட்டாளர்கள் நம்பிக்கையாக முதலீடு செய்யமாட்டார்கள். சிறிலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெறும போர்ச் சூழ்நிலையில் உல்லாசப் பயணத்துறை போன்றவை வீழ்ச்சி அடைந்திருக்கும் இவ்வேளையில் குறுகியகால முதலீட்டினைக்கூட அந்நிய முதலீட்டாளர்கள் செய்யமாட்டார்கள். எனவே சிறிலங்காவின் பொருண்மிய அபிவிருத்தி திட்டவட்டமாக பின்நோக்கிச் செல்வதாகவே இருக்கப்போகிறது.

ஆனைப்பசி

திருமதி சந்திரிகா தனக்கு கிடைக்கும் கடனை எவ்விதம் செலவு செய்யமுடியும் என்பதைப் பார்ப்போமானுல் போர்க்கருவிகள், இராணுவ தளபாடங்கள். விமானங்கள் கப்பல்கள் வாங்குவதில் செலவு செய்யலாம். அதுவுமல்லாமல் தனது வாக்குவாங்கியை பெருக்குவதற்காக சில நலன்புரி நடவடிக்கைகளிலும் ஈடுபடலாம். வாக்குவாங்கி எனும்போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு விசுவாசமுள்ளவர்களும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் நம்பிக்கை உள்ளவர்களும் எப்போதும் ஓரளவுக்கு நிலையான தொகையினராகவே இருப்பர் இவர்களுக்கு கிடையில் அங்குமிங்கும் இல்லாது தளம்பல் நிலையில் உள்ள வாக்காளரை (Floating Vote) திருப்திப்படுத்துவதற்கு ஆட்சியில் இருக்கும் ஒவ்வோர் அரசாங்கமும் நலன்புரி நடவடிக்கைகளில் ஈடுபடும்.

ஜனசவிய, சமுர்த்திபோன்ற திட்டங்கள் மூலம் வாக்காளரை தம்வசப்படுத்துவதற்கு பணத்தை செலவு செய்யலாம். சிறிலங்காவில் தற்போது எழுந்துள்ள தொழிற்சங்க பிரச்னைகள், இளைஞர்கள்மத்தியில் உருவாகிவரும் அதிருப்தி போன்றவையும் மக்களை கவரும் வகையில் ஜே. வி. பி. யினர் நடாத்தும் போராட்டங்களும திருமதி சந்திரிகாவிற்கு நிம்மதி அளிக்குமா? மக்களின் தேவையை பூர்த்தி செய்யுமா? ஆனைப்பசிக்கு அரிசிப்பொரி தாக்குப்பிடிக்குமா?

-சி

அரசின் தீர்வைப்பொறுத்தே புலிகளை பேச்சிற்கு அழைக்கலாம்

(கொழும்பு)

தமிழ்மக்களுடைய பிரச்னைக்கான நியாயபூர்வமான தீர்வு என்னஎன்பதை அரசு வெளியிடுவதன் மூலமாகத்தான் விடுதலைப்புலிகளை மீண்டும்பேச்சுவார்த்தைக்கு அழைக்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும் என்று 'மேர்ஜ்' அமைப்பின் செயலாளர் திரு. பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்த நாட்டிலே தமிழர்களுடைய உரிமைகளை மறுக்கப்பட்டதன் விளைவாகவும் அவர்கள் உரிமைகளுக்காக நடத்திய ஜனநாயக ரீதியான போராட்டங்கள் அரசினுல் அடக்கி ஒடுக்கப்பட்டதை தொடர்ந்தே தமிழர்கள் ஆயுதமேந்தி போராடத் தொடங்கினர்

இந்த யதார்த்த நிலைமைகளை புரிந்து நாம் நோக்கும் போது தமிழர் பிரச்னையில் அரசுக்கு ஒரு முக்கியமான கடமையிருக்கிறது.

பேச்சுவார்த்தைக்கு வந்த விடுதலை புலிகள் பேச்சுவார்த்தையிலே இருந்தி இந்தப் பேச்சுவர்த்தையைத் தொடர்ந்து நடத்தக்கூடிய ஒரு சூழ்நிலையிலாமல் போனது ஒரு துர்பாக்கியமானது.

பேச்சுவார்த்தை நடத்துவதிலே அரசுக்கு போதியளவு நிபுணத்துவம் இல்லை என்பதாலும் விடுதலைப்புலிகள் பற்றி ஒரு சரியான புரிந்துணர்வு இல்லாமை போனற குறைபாடுகளினுல்தான் இந்தப் பேச்சுவார்த்தை முறிவடைந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

-ரி-சி

வெளிச்சமின்றிச் செல்லும் வாகனங்கள் மீது சோதனை

(அரியாலை)

யாழ். நகரில் இரவில் வெளிச்சமின்றி ஓடும் மோட்டார் சைக்கிள்கள் மோட்டார் வாகனங்கள் ஆகியவற்றை தமிழீழ காவல்துறையினர் வழி மறித்து சோதனையிடுவர்.

வெளிச்சமின்றி செல்லும் போது பிடிபடுபவர்களை காவல்துறையினர் கொண்டு சென்று குற்றப் பணம் அறவிடப்படும் எனக் காவல்துறையினர் அறிவித்துள்ளனர்.

வெளிச்சமின்றி இரவுவேளையில் இருட்டில் செல்வதால் பல விபத்துக்கள் நிகழ்வதும் குறிப்பிடத்தக்கது.

59-சி

டுட்டு இனத்தவர் 16பேர் அடித்துக்கொலை

(கிகாலி)

றுவண்டாவில் தாம் தமது சொந்தக் கிராமங்களுக்கு நேற்று திரும்பிய டுட்டு இனத்தவர் 16 பேரை ருட்சி இனத்தவர்கள் அடித்துக் கொலை செய்துள்ளனர்.

சென்ற ஆண்டு டுட்டு இன இராணுவத்தினர் ருட்சி இனத்தவரை படுகொலை செய்ததைத் தொடர்ந்து டுட்டு இனத்தவர்களும் தமது சொந்த இடங்களைவிட்டு அச்சம் காரணமாக வெளியேறியிருந்தனர். இவர்களே தமது சொந்தக் கிராமங்களுக்கு திரும்பியபோது அடித்துக் கோரமாக படுகொலை செய்யப்பட்டுள்ளதாக ஐ. நா. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது ருட்சி இனத்தவரின் கை ஓங்கிய நிலையில் அவர்கள் டுட்டு இனத்தவரை படுகொலை செய்து வருவதாகவும் ஐ நா. அதிகாரிகள் கூறியுள்ளனர்.

-சி

மாட்டை கொன்றவருக்கு ஆயிரம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

முல்லை மாவட்டம் ஒட்டிசுட்டான் வட்டத்திலுள்ள மன்னாகண்டல் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு மாட்டை சுட்டுக் கொன்றமைக்காக அபராதம் விதித்த சம்பவமொன்று அண்மையில் இடம் பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு கிராமத்தைச் சேர்ந்த இவர் ''இடியன்'' எனப்படும் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கட்டுத்துவக்கைக் கொண்டு மாட்டைச் சுட்டுக் கொன்றுள்ளார்.

இவ்வாறான பொறுப்பற்ற செயல்களினுல் கால்நடைகள் அழிக்கப்படுவது தடை செய்யப்பட்டிருந்தும் அதனை மீறி

(5-ம் பக்கம் பார்க்க)

ஜம்மு காஷ்மீருக்கு

குண்டு துளைக்காத 250 கார்கள் விநியோகம்

(ஸ்ரீநகர்)

ஜம்முகாஷ்மீர் மாநிலத்தில் எதிர்வரும் ஜூன் மாதம் சட்டசபைத் தேர்தலை நடாத்த திட்டமிட்டுள்ள இந்திய அரசு முதல் நடவடிக்கையாக அங்கு 250 குண்டுதுளைக்காதகார்களை அனுப்பவுள்ளது.

தேர்தல் ஜூன் மாதம் 18ம் திகதி முதல் 25ம் திகதிக்குள் நடாத்திமுடிக்கப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் இந்த தேர்தல்களை அங்கு நடாத்த தாங்கள் அனுமதிக்கப் டவதிலை என காஷ்மீர் தீவிரவாதிகள் கூறியுள்ளதும் குறிபிடத்தக்கது.

-சி

இந்திய அரசு குண்டுதுளைக்காத கார்களை அங்கு அனுப்பவுள்ளது.

விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கையை ஊக்குவிக்க கடனுதவி

(பண்டத்தரிப்பு)

கட்டுடை சமுக அபிவிருத்தி சேமிப்பு கழகத்தை சேர்ந்த 47 விவசாயிகளுக்கு முதல் கட்ட விவசாய சுழற்சிமுறை கடன் திட்டத்தின்கீழ் யாழ். சமுக அபிவிருத்தி மன்றத்தினுல் இரண்டு இலட்சத்து 35 ஆயிரம் ரூபா அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

மேட்டு நிலப் பயிர் செய்கை மற்றும் மரக்கறி பயிர்ச்செய்கை, சிறுதானிய செய்கை ஆகியவற்றை ஊக்குவிக்கவே இக்கடனுதவி வழங்கப்பட்டிருப்பதாக கட்டுடை சமுக அபிவிருத்தி சேமிப்பு கழகத்தின் தலைவர் திரு. சி. பொ. வ. க. முதலியார் தெரிவித்தார்.

-72

பொது அறிவுப் போட்டி

(கொழும்புத்துறை)

யாழ். நல்லூர் முருகன் சனசமுக நிலையத்தின் பொது அறிவுப் போட்டி, இம்மாதம் 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். நல்லூர் மங்கையர்கரசி வித்தியாசாலையில் இடம் பெறவுள்ளது.

154

பொதுன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர். இளை நூலகம்

இன்றைய அரசியல் நிலை....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ரேம். இன்று இந்த மே நாளானது எமது போராட்டத்தில் மிகப் பெரிய மாற்றத்தையும் வளர்ச்சியையும் காட்டிநிற்கும் நாளாக அமைகிறது.

எமது போரட்ட வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்திற்குள் காலடி எடுத்துவைக்கின்ரேம். தரையில் இராணுவத்தின அத்துமீறல்கள், ஆக்கிரமிப்புக்கள் கட்டுப்படுத்தப்பட்ட பின்பு கடலால் தனது ஆக்கிரமிப்புக்களைத் தொடர்ந்து அரசிற்கு எமது தேசியத் தலைவரின் கூர்மையான வழிகாட்டலில் உருவான கடற்புலிகள் தங்கள் வீரதீரச் செயல்களால் கடலாதிக்கத்தைக் கட்டுப்படுத்தினர்கள்.

அரசுக்கு பலத்த அடி

இது அரசின் உறுதிப்பாட்டிற்கும் எண்ணப்பாட்டிற்கும் பலத்த அடியாக அமைந்தது அடுத்து தனது வான்படையில் முழுமையாக நம்பியிருந்த அரசிற்கும் இராணுவத்திற்கும் எமது தேசியத் தலைவரின் அயராத முயற்சியால் உருவாக்கப்பட்டிருக்கும் விமான எதிர்ப்புப் படைப் பிரிவு அரசின் மிகப்பெரும் நம்பிக்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது

இப்படைப்பிரிவானதுகுறிப்பிட்ட சில மணித்தியாலங்களுக்குள்ளேயே தனது இரு வெற்றிகரமான தாக்குதல்களை நடாத்தி பல கோடி ரூபா பெறுமதியானவிமானங்களையும் நூற்றுக்கணக்கான ஆக்கிரப்பாளர்களையும் அழித்துள்ளது.

அதாவது இவ்விரு இராட்சத விமானங்களும் எங்கள் மண்ணிலேநூற்றுக்கணக்கான பீப்பா குண்டுகளை வீசி எமது பல கோடிரூபா பெறுமதியான சொத்துக்களையும் அழித்து எமது நூற்றுக்கணக்கான மக்களின உயிரைக் குடித்ததை நாம் அறிவோம். பல ஆயிரக்கணக்கான மக்களைக் காயப்படுத்தி ஊனமுற்றவர்களாக்கியதையும் நாம அறிவோம்.

எமது மண்ணில் விமானங்கள் வீழ்ந்தன

இன்று எமது மண்ணிலேயே இந்த விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டு சிதறிக்கிடப்பதைக் காணகின்ரேம். இது ஒன்றை நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது. அதாவது உண்மைக்காகவும், நேர்மைக்காகவும், உரிமைக்காகவும் போராடுகின்ற எமது இனத்திற்கு எந்தச் சக்தி எதிர்த்து நின்ரூலும் அதை அடிபணிய வைக்கும் மகோன்னதநிலையை இந்த வெற்றிகரமான தாக்குதல்கள் காட்டுகின்றது.

40 வருட உரிமைப் போர்

இன்று 40 வருடங்களுக்கு மேலாக நடைபெறறுக்கொண்டிருக்கும் உரிமைப் போர் தீவிரமாக உச்சமடையும் நேரங்களில் எல்லாம் பேச்சுவார்த்தைகள் என்றும், அரசியல் தீர்வு என்றும், சமாதான முயற்சிகள் என்றும் கூறி எமது போராட்டங்களை நசுக்க முற்பட்டதாகவே வரலாறு உள்ளது. ஆனால் எமது தேசியத்தலைவரால் எமது உரிமைப் போர் வடிவம் மாற்றப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட திலிருந்து தமிழினத்தை இனிஎவராலும் ஏமாற்றமுடியாது என்ற நிலை தோன்றியது.

ஆனால் எமது தேசியத் தலைவர் எப்போதுமே சிங்கள இனவாதிகள் மனம் மாறிச் சமாதானம், தமிழர்களின் உரிமைகள் என்பதில் நேர்மையாக வரும்போது அதற்கான நேசக்கரத்தையும், தையும் நீட்டியே வந்துள்ளனர். ஆனால் இதுவரை இல்லாத ஓர் அரசியல் மாற்றம் என்று சந்திரிகா அரசின் வருகையை நாம் அனைவரும் நம்பினேம். ஆனால் சந்திரிகா பதவி ஏற்ற பின் அவர் பற்றி எம்மிடம் இருந்த அனைத்து நம்பிக்கைகளையும் தகர்த்து, இன்று அவருடைய நடவடிக்கைகள் எமது நம்பிக்கைகளையுமே தகர்த்திருப்பதைக் காணகின்ரேம்.

சந்திரிகாவின் உண்மை வடிவம்

வரலாற்றில் எப்படி எப்படிச் சிங்கள இனவாதங்களைக் கண்டோமோ, அதே மாதிரியாகச் சற்று வடிவம் மாறி ஓர் ஆபத்தான இனவாதமாக இன்று இருக்கின்றது. அதாவது சந்திரிகா உலகத்திற்கும், சிங்கள இனத்திற்கும் தம்மை ஒரு புத்திசாலித்தனமான தலைவியாகக் காட்ட முயல்கிறார். வெளிப்படையாக முரட்டுத்தனமாக இனவாதம் பேசாது செயலில் எவ்வளவுக்குத் தமிழ்மக்கள் மீது இனவாதத்தைத் தொடுக்கமுடியுமோ அவ்வளவுக்குத் தமது திறமையைக் காட்ட முயல்கிறார்.

ஆனல் தற்காலிகமாக இது சற்று எடுபட்டாலும் நீண்ட நோக்கில் சந்திரிகா மிகவும் ஆபத்தான அரசியல் நிலைக்குத் தள்ளப்படுவார் என்பது தான் உண்மையானது. அவரைப் பொறுத்தளவில், அதாவது இன்று தமிழீழப் பிரதேசத்தில் தமிழினத்திற்கான பலமான, உறுதியான தளத்தைப் பெற்றுள்ள இன்றைய தேசியத் தலைமையும், போராட்டச் சக்தியையும் எவ்வளவு புத்திசாலித்தனமாகவும், சமாதானம் தமிழர்களுக்கான சலுகைகள் என வெளியுலகுக்குக் காட்டி, இந்த விடுதலைப் போராட்ட சக்தியை தமிழ் மக்களிடமிருந்து அன்னியப்படுத்தும் அல்லது சிறிது சிறிதாக நசுக்கி அழித்து விடுவதுதான் சந்திரிகாவின் திட்டம்.

அதாவது முன்பிருந்த சிங்கள இனவாத அரசுகளை விட புத்திசாலித்தனமாக மிகவும் சாதுரியமாக சிங்கள இனவாத தலைவியாக இருப்பதையே இன்று நாம்பார்க்கக் கூடியதாயுள்ளது. இன்று நாம் ஆறு மாத காலமாக பேச்சுவார்த்தை என்றும் மக்களின் நலன்கள் சமாதானம் என்றும் தமிழ் வாழ்வியக்கங்களை புறம்தள்ளி சர்வதேச நாடுகளுக்கு தன்னை ஒரு சமாதான பெருந்தலைவியாக காட்டி பெரும் பிரசாரத்தை மேற்கொண்டு மேற்குலக நாடுகளின் உதவிகளை பெற்றுக்கொண்டு தன்னை ஸ்திரப்படுத்துவதே சந்திரிகாவின் நோக்கமாக இருக்கின்றது.

இதனாலேயே மீண்டும் போராட்டம்தான் எமது உரிமையை மீட்டெடுக்க வேண்டும் என்ற நிலைக்குதள்ளப்பட்டோம். சந்திரிகாவின்ரை சரியாக புரிந்து கொள்ள வேண்டும். எமது பேச்சுவார்த்தை என்ற நிலைப்பாடும், சமாதானத்தீர்வு என்ற நிலைப்பாடும் விடுதலைப் புலிகள் பலவீனமாக எடுத்த முடிவுகளாக கருதுவது மிகவும் துர்ப்பாக்கியமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

சந்திரிகா புரிந்து கொள்ளவேண்டும்

பேச்சுவார்த்தைகள் அனைத்துமே தமிழ் மக்களின் உரிமைகள் என்ற நிலையிலும் பலத்தின் அடிப்படையிலும் சம நிலையிலும் நடைபெறவேண்டுமே தவிர தமிழ் மக்கள் பலவீனமானவர்கள், சிங்கள தேசியத்திற்கு அடிபணியவேண்டும் என்ற நிலையோடு பேச முற்படுவது பெரும் முட்டாள்தனமாகும்.

ஆகவே இன்று ஒரு இக்கட்டான சூழ்நிலையில் எமது போராட்டத்திலே புதிய பரிமாணவளர்ச்சிக்குள் நாம் தள்ளப்பட்டுள்ளோம். இவ்வளவுகாலமாக எமது மக்கள் பேச்சுவார்த்தை என்றும், எப்போது எங்களுக்கு சமாதானம், எங்களுக்கான உரிமைகள் கிடைக்கும் என்று இருந்த காலம் போய் மீண்டும் எமது இனம் உறுதியாக நின்று போராடி எமது உரிமைகளை மீட்டெடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

காலம் கடத்தும் நடவடிக்கை

கடந்த நான்கு கட்டப் பேச்சுக்கள் அனைத்தும் புறக்கணிக்கப்பட்டு தடுத்து நிறுத்தப்பட்டு வெறும் காலம் கடத்தும் நடவடிக்கையாகப் பேச்சுக்களிலும் தனக்கு ஒரு பிரசார நடவடிக்கையாகவுமே சந்திரிகா மேற்கொண்டுள்ளார். இந்நிலையில் அவரால் நாமும் தமிழ் மக்களும் பெருமளவில் ஏமாற்றப்பட்டோம். நாம் எவ்வளவோ சந்தர்ப்பம் கொடுத்தும் தமது உறுதிமொழிகளை நிறைவேற்றாது. சமாதானப் பேச்சுவார்த்தையை அர்த்தமற்றதொரு நிகழ்வாகவே மாற்றி விட்டார்கள். இந்நிலையில நாம் சந்திரிகா அரசுக்கு இரு முறை காலக்கெடு வழங்கினேம். பேச்சுக்களில் கலந்து கொள்ளும் ஒரு தரப்பு என்ற ரீதியிலேயே நாம் அந்தக் காலக்கெடுவை வழங்கினேம் அதைக் கூட சந்திரிகா உதாசினப் படுத்தி விட்டார்.

அரசு உறுதியான முடிவுகளை எடுக்கவில்லை

இந்நிலையில் இந்த அரசாங்கம் உண்மையான உறுதியான முடிவுகளை எடுக்காத நிலையில் நாம் சிலவேதனையான முடிவுகளை எடுத்தோம். இன்று அங்குள்ள சமாதானப்பிரியர்களோ சமாதான தூதுவர்களோ அமைதியை விரும்புபவர்களோ எல்லோருமே தாம் சிங்கள தேசியம், சிங்கள மக்களின் நலன் இராணுவத்தின் நலன் என்பவற்றை மையமாக வைத்தே அவர்கள் தங்களது எந்த நடவடிக்கையையும் நகர்த்தி வருகிறார்கள். ஆகவே இந்தச் சூழ்நிலையில் நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்.

யுத்தம் எமக்கு அவசியமா?

அதாவது எமது போராட்டம் எமது தேசியத்தை எமது இனத்தை, எமது மண்ணை இங்கே நிலைநிறுத்துவதற்கான எமது கௌரவத்தை காப்பாற்றுவதற்கான எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஒரு போராட்டமாக இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே கருத்து ரீதியாக ஒரு சிலர் மத்தியில் குழப்பங்கள் இருக்கிறது. விடுதலைப் புலிகள் மிகவும் அவசரப்பட்டு இத்தகைய முடிவை எடுத்து விட்டார்களென்று.

நாம் ஏன் இவ்வளவு அவசரப்பட்டு இந்த முடிவை எடுக்க வேண்டும். அதாவது யுத்தம் எங்களுக்கு அவசியமா? நாம் ஏன் இந்த முடிவை எடுத்தோ மென்ரூல் அதற்கான விளக்கங்கள் பல உள்ளது அதாவது காலம் காலமாக எமது இனத்தை ஏமாற்றிய வரலாறுதான் உள்ளது. ஆகவே இன்று

இழுத்தடிக்கும் நடவடிக்கை

அந்தப் பேச்சுவார்த்தை சமாதானம் என்று இழுத்தடிக்கும் சந்திரிகாவின் நடவடிக்கை அவரது அரசியல் ரீதியான ஸ்திரத்தையும் இராணுவ ரீதியான பலப்படுத்தலையும் நாங்கள் ஏற்றுக் கொள்வதாக முடியும்.

காலப் போக்கில் அரசியல் பேச்சு, இனப்பிரச்சினை சம்பந்தமான பேச்சுக்கள் எனக்கூறி வந்து எமது பேச்சுவார்த்தையைகுழப்பியடித்து மீண்டு மொரு பெரிய யுத்தத்தை எமது மக்கள் மீது திணிக்க முற்படுவார்கள். இந்நிலையில் உறுதியான சமாதானத்தை நோக்கி நகரவேண்டும். அல்லது நாம் யுத்தத்தின் மூலமாகவாவது எமது மக்களுக்கு அமைதியையும் சமாதானத்தையும் சுதந்திரமான வாழ்வையும் பெற்றுக்கொடுக்க வேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டது.

பொறுமையைக் காட்டினேம்

இந்த நிலையில்தான் நாம் அரசாங்கத்திற்கு எவ்வளவு தூரம் எமது பொறுமையைக் காட்ட முடியுமோ அல்லவு தூரம் காட்டியுள்ளோம் எம்வசமிருந்த அனைத்து யுத்தக் கைதிகளையும் கட்டம் கட்டமாக விடுதலை செய்து, எம்மால் காட்டக்கூடிய அளவுக்கு நல்லெண்ணச் சமிக்ஞை எமது தேசியத் தலைவரால காட்டப்பட்டது.

ஆனல் மக்களுடையவாழ்வு, இன்று அவர்களுடைய அன்றாடப் பிரச்சினைகளைத் தடை செய்து வைத்துக்கொண்டு, உலகில எங்குமே இல்லாத அநீதியான தடைகளை ஏற்படுத்தி வைத்துக்கொண்டு. ஒருசிலவற்றை அறிவித்துக் கொண்டு இது தமிழ்மக்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் வழங்கிய சலுகைகளாகக் காட்டுவது மிகவும் வேனக்குரியது. இதை நாம் ஏற்கவே முடியாது.

ஒருதலைப்பட்சமான பிரசாரம்

ஆகவே எம்மைப் பொறுத்த வரையில் இன்று சந்திரிகாவின் ஒருதலைப்பட்சமான பிரசாரங்கள் இன்று உலக நாடுகளில் ஒலிக்கிறது. இது எம்மைப் பொறுத்தளவில தற்காலிகமானதுதான். இந்த நாடுகள் சந்திரிகாவின் ஒருதலைப்பட்சமான பிரசாரங்களை நம்பிக்கொண்டு, விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் பற்றிக் கருதுவது தற்காலிகமானதுதான். உண்மை நிலைகள் என்ரே ஒரு நாள் தெரியவரப் போகின்றன எமது மக்களுடைய நேர்மையானதும், உண்மையானதும், நியாயமானதுமான உரிமைப் போர் சம்பந்தமான நிலைமை அவர்களுக்கு என்ரே ஒருநாள் தெரியவரும்போது அவர்களின் இந்த வேதனையான முடிவுகளிலிருந்து நிச்சயமாக மாற்றம் பெறுவார்கள். தங்களது முடிவுகளை மாற்றிக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

இரத்தம் சிந்தியே விடுதலை

ஆகவே எமது மக்களாகிய நீங்கள், இன்றுநாம் போராடி இரத்தம் சிந்தி எமது விடுதலையை வென்றெடுக்கவேண்டும். இதைவிட எமக்கு வேறு வழியேஇல்லை. ஒன்று அடிமைகளாக அழிந்தொழியவேண்டும். அல்லது போராடி சுதந்திரமாக வாழவேண்டும். இதுதான் எமது அரசியல் தலைவிதி நீதிக்காகவும், தர்மத்திற்காகவும் எமது சுதந்திரத்திற்காகவும் உறுதியாக வளர்ந்துவரும் எமது போராட்டம் தமிழ்மக்கள் அனைவரதும் உறுதியாடும் பங்களிப்போடும் தேசியத் தலைவரின் வழிகாட்டலின் பின்னல் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது என வும் கூறினர். சி-இ

புலிகளின் மோட்டை

(1-ம் பக்கத தொடர்ச்சி)

பலாலி ஆகிய இராணுவ முகாமகளுக்கு இராணுவத் தளபாடங்கள், உணவுப் பொருட்கள் உட்பட ஏனைய பொருட்களை அனைத்தும் விமானப் படையின் விமானங்கள் மூலமாகவே விநியோகிக்கப்டுகின்றன.

விடுதலைப் புலிகளால் இரு விமானங்கள் சுட்டு வீழ்த்தப் பட்டதை அடுத்து, மற்படி இராணுவ முகாம்களுக்கு இந்தப் பொருட்களை விநியோகிப்பதில் பெரும் பிரச்சினை எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு விமானப் படையை உடனடியாக நவீனமயப்படுத்த வேண்டும் எனப்பாதுகாப்புத்துறையினர் அரசாங்கத்தைக் கேட்டுள்ளனர். இ

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இந்நடவடிக்கையை செய்த மைக்காகவே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விலங்கு வேளாண்மைப் பகுதியினர் இவ்அபராதத்தை விதித்துள்ளனர். -சி

சார்க்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ளார்

இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளுமுகமாக பாகிஸ்தான் அதிபர் பெனுஸிர் பூட்டோ ஏற்கனவே புதுடில்லி வந்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. க-சி -சி

யுத்த விமானம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விமானங்களில் பயணம் செய்வது இரத்து செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு சபை முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி இரு அவ்ரோ விமானங்கள் வீழ்த்தப்பட்டதும் பெருமளவு படையினர் உயிரிழந்ததையடுத்துமே அரசசங்கம் மேற்கண்முடிவுக்கு தந்ததாக தெரிவிக்கப்படுகிறது. க-இ

மேதினப் பேரணியில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இதனைத் தொடர்ந்து ஒலிபெருகி வாகனம் பின்னே செல்ல தமிழீழ தேசியக் கொடி முன்னெடுத்துச் செல்லப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பான்ட் வாத்திய இசை அணிபினரின் இசையுடன் விடுதலைப்புலிகளின் கடற்புவிகள், தமிழீழக் காவல்துறையினர், மாணவர் அமைப்பை சேர்ந்தவர்கள் பேரணியில் பின் தொடர்ந்தனர்.

தமிழீழ தேசியத்தலைவரின் உருவபடம், தமிழீழத்தின் படம் ஆகியவை தொடர ஊர்தி ஆரம்பமாகியது.

ஊர்தியின் ஆரம்பத்தில் இந்து, கிறிஸ்தவ குருமார்கள் அணிவகுத்து வர, கரும்புலிகளின் கப்பல் முதலாவது ஊர்தியாக நகர்ந்து சென்றது

அதனைத்தொடர்ந்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரின் ஊர்தியும் நிறுவன பணியாளர்களும் அணிவகுத்துச் சென்றனர்.

பேரணியின் ஆரம்பத்தில் வடமராட்சி கோட்டத்தை சேர்ந்த ஊர்திகளும் கடற்புலிகள் கோட்ட அணிகளும் கலந்து கொண்டன.

கூட்டுறவுத்துறை ஊழியர்கள், கிராமிய, உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள், கல்வித்துறைசார் அதிகாரிகள் அதிபர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் கிராமிய உழைப்பாளிகள் சங்கத்தினர், சுகாதார, வங்கி ஊழியர்கள் குடிசார் பொறியியலாளர்கள், மக்கள் அமைப்புகளை சேர்ந்தோர் அணிவகுத்துச் சென்றனர்.

வடமராட்சி கோட்டத்தை அடுத்து தென்மராட்சி, தீவகம் வலிகாமம் கோட்ட ஊர்திகளும் பேரணியும் தொடர்ந்து சென்றன

சமகால நிகழ்வுகளை சித்தரிக்கும் ஊர்திகள், பொம்மலாட்டம் குதிரை ஆட்டம், கரகம், காவடி போன்ற சுவையான ஊர்திகள் மகளின் பார்வையை கவர்ந்திருந்தன.

யாழ்ப்பாண மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் திரு சு இளம்பருதி தலைமையில் விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் பலர் ஊர்வலத்தை ஒழுங்கு படுத்தினர்

வீதியின் இரு மருங்கிலும் மக்கள் திரண்டுநின்று பேரணி ஊர்திகளை கண்டுகளித்தனர்.

ஊர்தி முடிவில் யாழ். பல்கலைக் கழக வைத்தியபீட மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

109-162-157-இ



மேதினப் பேரணியில் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் உருவப்படமும் கப்பல் வடிவிலான ஊர்தியும் காணப்படுகிறது. [படங்கள்: தேவா]

கோழிகளுக்கு நோய் தடுப்பூசி

(கொழும்புத்துறை)

சண்டிலிப்பாயில் செயல்பட்டுவரும் சங்கானை கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையில் கோழிகளுக்கு நோய்த்தடுப்பு ஊசி மருந்து போடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோழிகளை நோயிலிருந்து பாதுகாக்க கோழிகளுக்கு இந்தத் தடுப்புஊசி மருந்தை பிரதி சனிக்கிழமை தோறும் காலையில் போடப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது. -154

மேதினக் கூட்டத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் நடைபெற்றது:

எனினும் ஜனாதிபதி சந்திரிகாபண்டாரநாயக்கா குமாரதுங்க இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு ஜனாதிபதி இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லையென தெரிவிக்கப்பட்டது: -இ

இராணுவ நடவடிக்கைகளுடன் சமாதான முயற்சிகளும் தொடரும்

(கொழும்பு)

வடபகுதியில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் ஆரம்பமாகியுள்ளபோதிலும், சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்வது என அரசாங்கம் முடிவுசெய்துள்ளதாக அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் இராணுவ நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா இராணுவம் சமாளிக்க முடிவுசெய்துள்ளது. அதேவேளையில் சமாதான முயற்சிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பண்டாரநாயக்கா தலைமையிலான அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இராணுவ நடவடிக்கையும், சமாதான முயற்சிகளும் வெவ்வேறானவை என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (கே-இ)

புலிகளின் விமான எதிர்ப்பு பிரிவு பாதுகாப்புவழங்கியது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற மேதினப் பேரணிக்கும் மாபெரும் பொதுக் கூட்டத்திற்கும விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்பு பிரிவினர் பூரணபாதுகாப்பு வழங்கினர்.

பேரணியில் நேற்று பெருமளவு மக்களும் விடுதலைப்புலிகளும் அதிகளவில் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகள் பூரண பாதுகாப்பு வழங்குவர் என்பதனால் பெருமளவுமக்கள் எந்த விதபதற்றமும்இன்றி பேரணியில் கலந்துகொண்டனர்.

க-இ

இந்திய ராணுவ உதவி பெற இலங்கை அரசாங்கம் முயற்சி?

(கொழும்பு)

இலங்கை இந்தியாவிடம் இராணுவ உதவியை நாடக்கூடுமென கொழும்பில்இராஜதந்திரவட்டாரங்கள் தெரிவித்ததாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகள் தமது தாக்குதலை அதிகரித்திருப்பதனால் இந்தியாவின் உதவியை இலங்கை அரசாங்கம் நாட விருப்பதாக இச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக்கா இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார் என தினகரன் பத்திரிகை செய்தி வெளியிட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தெற்காசிய மாநாடுகளின் 8வது உச்சநிலைமாநாட்டில்கலந்துகொள்வதற்காகஜனாதிபதி சந்திரிகா புதுடில்லி செல்வதையொட்டி இரு தலைவர்களுக்கும் இடையில் இடம்பெறும் பேச்சுவார்த்தையில் இராணுவ உதவி குறித்தும் கோரப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது

தற்போதைய யுத்தத்தில் விடுதலைப் புலிகளின் கைஓங்கியுள்ளதால், வெளிநாடுகளின் உதவியைப் பெற இலங்கை அரசு முடிவு செய்துள்ளது.

இந்தியப் படை முன்னர் இலங்கை வந்து விடுதலைப் புலிகளிடம் தோல்வியைச் சந்தித்ததால், எந்த ஒரு நாடும் தனது படைகளை இலங்கைக்கு அனுப்ப முன் வராது போகலாம்.

எனினும் நவீன ஆயுதங்களைப் பெறவும் அல்லது குறைந்த விலையில் ஆயுதங்களைப் பெறவும் இலங்கை அரசு முயற்சிகளை மேற்கொள்ளக்கூடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. க இ

கண்ணி வெடியில் சிக்கி நான்கு சிப்பாய் பலி

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள செங்கலடிப் பகுதியில் இராணுவ வாகனம் ஒன்று கண்ணிவெடியில் சிக்கியதில் நாலு இராணுவத்தினர் அதே இடத்தில உடல் சிதறிப் பலியானார்கள்.

இராணுவ ஆயுதங்களையும் வேறு பொருட்களையும் ஏற்றிக்கொண்டு சென்ற இராணுவ வாகன அணி ஒன்று செங்கலடியில் மதகு ஒன்றைத் தாண்டும்போது, விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கியது.

கண்ணிவெடியில் சிக்கிய வாகனத்தில் சென்ற இராணுவத்தில் நால்வர் அதே இடத்தில் உடல் சிதறிப் பலியானார்கள். ஒன்பது பேர் படுகாயமடைந்ததுடன் இராணுவ வாகனமும் முற்றுமுழுதாகச் சேதமடைந்தது. இச்சம்பவத்தினால் மட்டுநகர் நேற்று வெறிச்சோடிக் கிடந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அம்பாறையில் விடுதலைபுலிகள் மேற்கொண்ட மற்றொரு தாக்குதலில் இரு பொலிஸார் பலியாகினர் எனவும் தெரிவிக்கப்பட்டது: (வி-இ)

ஐ. தே. கட்சியின் பேரணி மீது பொலிஸார் குண்டாந்தடிப்பிரயோகம்

(கொழும்பு)

கண்டியில் ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவர்கள் நேற்று மேதினத்தையொட்டிநடாத்த விருந்த பேரணி மீது பொலிஸார் குண்டாந்தடி பிரயோகம் செய்ததாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

கண்டியில் மத வைபவங்கள் இடம்பெற்றபின்னர்ஸ்ரீதலதா மாளிகை வரையில் பேரணி நடத்துவதற்கு ஐ. தே. க.வினர்முயற்சிகள் மேற்கொண்ட சமயத்தில் பொலிஸார் அவர்கள் மீது குண்டாந்தடி பிரயோகம் செய்து அந்த பேரணியை நடாத்தவிடாமல் தடுத்தனர்.

இந்தச் சம்பவத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உட்பட சிலர் சிறு காயங்களுக்கு இலக்கானதாகவும் தெரிவிக்கப்பட்டது:

இந்தத்தாக்குதலை எதிர்த்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் கண்டி பிரதான வீதியின் நடுவே பத்து நிமிடங்கள் சத்தியாக்கிரகம் மேற்கொள்ளப் பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது -இ

கொழும்பில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பட்டதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

ஆனால் அரசாங்க தரப்பு தகவல்கள் இவற்றை மறைக்கும் வகையில் விடுதலைப்புலிகளின் தாக்குதலினால் கொல்லப்பட்ட இராணுவத்தினருக்கு மரியாதை செலுத்தும் விதமாகவே அரசியல் கட்சிகள் மேதினப்பேரணிகளை இரத்து செய்ததாக தெரிவித்தன.

இதற்கிடையில் 6000க்கும் மேற்பட்டபடையினர் நேற்று கொழும்புக்கு விசேடமாக அழைக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும் கப்பல்கள் மீதும் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தக்கூடும் என்றும் இராணுவம் அச்சம் வெளியிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. க.இ

பலியான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யைகள் காங்கேசன்துறையில் நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

சடலங்கள் உருக்குலைந்த படியால் காங்கேசன்துறையிலேயே தகனம் இடம்பெற்றதாகவும் அஸ்தியை படையினரின் குடும்பங்களுக்கு அனுப்ப ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சடலங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் காங்கேசன்துறையில்வைத்துபடையினரிடம் கையளிக்கப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. க-இ

ஒக்சிசன் வாயுவுக்கு தட்டுப்பாடு

(நெல்லியடி)

பருத்தித்துறை அரசினர் வைதியசாலையில் ஒக்சிசன் வாயுவுக்கு தட்டுப்பாடு ஏற்படவுள்ளது.

தற்பொழுதுகுறிப்பிட்டளவு மட்டுமே களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கின்றதென்றும் அவை முடிவடைந்ததும், கொழும்பிலிருந்து கப்பல் மூலம் கிடைக்கப் பெருவிடின் பெரும் கஷ்ட நிலை உருவாகும் என வைத்தியசாலை வட்டாரங்கள் கவலை தெரிவித்தன. 160-ரி

நேற்று ஒலித்த மேதினக் கோஷங்கள்

(உடுவில்)

மேதின ஊர்தியில் ஒலித்த கோஷங்களில் சில.....

★ கூடிப் பேசிக் காலத்தைக் கடத்தாதே: நாடிப் பேசு நல்ல மனதுடன்
★ சுதந்திரம் எமது பிறப்புரிமை சுட்டெரிப்போம் அதை தடுப்பவரை
★ பேசியதைக் கொடு; பெரும் போரைத்தடு
★ புனர் நிர்மாணப் பேச்சு புஸ்வாணம் ஆச்சு
★ அம்மையார் அள்ளிவீசிய வாக்குகள் அரைகுறையேயன்றி முழுமை அல்ல
★ ஏச்சுப் பிழைச்சு காலமும் போச்சு நாம் ஏமாந்த காலமும் போச்சு
★ மே நன் நாளில் சோந்திருக்கிறோம் ஏமாற்ற யோசிச்சாதே
★ தன்னிறைவான பொருளாதாமே தேசிய வாழ்வுக்கு மூலாதாரம்
★ வெட்டுப்புள்ளி; தமிழ்மாணவருக்கு வேட்டுப்புள்ளி

109 157 162 இ

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு மே மாதம் 02-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Neaws paper at the General Post office Sri Lanka under Lieence number B/1633613.